# வாக்குத்தத்தம்

ஜெஃப் சிசிலோ

*Jeff Scislow*



# வாக்குத்தத்தம்

ஜெப் சிசிலோ

*JEFF SCI SLOW*

பதிப்புரிமை © 2013 – ஜெப் சிசிலோ

*www.JourneyToAMiracle.com*
*jeff@JourneyToAMiracle.com*

எல்லா உரிமைகளும் பதிவு செய்யப்பட்டுவிட்டது.
இந்த புஸ்தகத்தை மறுபதிப்பு செய்தோ, மின்னணு மூலமாக பதிவு செய்தோ, இயந்திரங்களைக் கொண்டு புகைப்பட நகல் எடுப்பதோ, இப்போது இருக்கக்கூடிய அல்லது இனிமேல் உருவாகக்கூடிய கருவிகள் மூலமாக பதிவு செய்வதோ, இப்புத்தகத்தின் உரிமையாளருடைய எழுத்து ஒப்புதல் மூலமாக அனுமதிபெறாமல் செய்யக்கூடாது. தேவையான சிறுகுறிப்புகளை மட்டும் தொலைகாட்சியில் ஒளிப்பரப்பு அல்லது வானொலியில் ஒலிபரப்பு செய்ய எடுத்து கொள்ளலாம்.

*New Amercian Standard Bible* என்ற வேதாகமம் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. பதிப்புரிமை 1960, 1962, 1963, 1968, 1971, 1972, 1973, 1975, 1977, 1995 – லாக்மன் பவுண்டேஷன் உரிமையாளரின் அனுமதியுடன்.

அச்சிட்டோர் : **மெய்ப்பொருள் அச்சகம்**
**அயன்புரம், சென்னை – 600 023.**

வாழ்க்கையில் தீயசம்பவங்கள் நடப்பதுண்டு. அந்த சம்பவங்கள் பல வடிவங்களிலும் நிலைகளிலும் நம்மை சந் திக்கும். இவைகளில் சில காரியங்கள் நமக்கு சவாலாகவும் அல்லது தடைகளாகவும், மற்றும் பேரழிவை ஏற்படுத்தும் பயங்கர சம்பவங்களாகவும் இருக்கும். உண்மையில், நாம் எல் லாரும் அவைகளை சந்திக்கும்போது, எதிர்பாராதவிதம் வரும் அவைகளுக்கு வித்தியாசமான முறைகளில் பதிலளிக்கிறோம்.

“வாக்குத்தத்தம்” அநேகர், தங்கள் வாழ்க்கையில் வரும் சவால்களுக்கு எதிராக எப்படி செயல்பட வேண்டும் என்ற வழிகளை ஆராய்வதோடு, இந்த செயல்கள், நாம் எதிர்பார்த்த பலனை எப்படி கொண்டுவருகிறது என்பதையும் விவரிக் கின்றது. உங்களுடைய பதில் செயல்களை திருத்தி அமைப்பதின் மூலம் உங்களுக்கு வரும் விளைவை மாற்ற முடியும், அதோடு, நாம் சவால்களை எதிர்க்கொள்ளும் மிக கஷ்டமான நேரங்களில் கூட பலன்தரும் அனுபவங்களை, அதுவும் அசா தாரணமான அனுபவங்களை பெற முடியும். இந்த ‘வாக்குத் தத்தை’ நீங்கள் உங்களுக்கு வழிகாட்டியாக எடுத்துக்கொண் டால், முடியாதவைகள் என்று தோன்றினவைகள், எவ்வளவு பெரிய தடையாக இருந்தாலும் சரி அல்லது கொடிய சூழ்நிலை யானாலும் சரி, அவை எல்லாம் சாத்தியமாகும்.

வல்லமையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஒரு நீண்ட செய்தி அவசியமில்லை என்பதை ஜெப் அவர்களின் கதை நிறுப்பிக்கின்றது. நாம் சந்திக்கும் சவால்கள் எப்படிப்பட்டவை களாயினும், நாம் ஒவ்வொருவரும் விரும்பும் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள தேவையான உபகரணங்களை இந்த "வாக்குத்தத்தம்' கொடுக்கிறது.

***– Dan Proeschel, D.D.S.***

மெய்யாகவே ஊக்கமளிக்கப்பட வேண்டும் என்பவர்கள் கட்டாயம் வாசிக்கவேண்டிய கதை இது

***- Tom Eckert, Capitan Ineternational 747***

சமாளிக்க இயலாத சச்சரவுகளை மேற்கொண்டு, வாழ்க்கையின் நோக்கத்தை கண்டறிய முடியும் என்பதை 'வாக்குத் தத்தம்' என்ற இப்புத்தகத்தின் மூலமாக ஜெப் நமக்கு காண்பிக் கிறார். அவருடைய எடுத்துக்காட்டுகள் எல்லாம் எனக்கு தருவது, நம்பிக்கையின் மூலமாக எல்லாம் கூடும் என்கிற விசுவாசம் மட்டுமே.

***- Pastor Rob Ketterling, River Vally Church***




# வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை

விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும்
சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களை
பின்பற்றுகிறவர்களாயிருங்கள்

*எபிரெயர் புத்தக ஆசிரியர்*

பின்வருபவைகளை கருத்தில் கொள்ளுங்கள்: ஒரு சோதனை அல்லது ஒரு நெருக்கடியை சந்திக்கும் போது அதற்கு எதிராக நீங்கள் எப்படி செயல்படுவீர்கள்? உங்கள்

பிரதியுத்திரமான செயல்கள் நிதானமானதாக இருக்குமா? அல்லது எதிர்பாராதவிதமாக இருக்குமா? நீங்கள் செயல்படுவீர்களா? அல்லது நிற்கதியற்ற நிலையில் இருக்கிறேன் என்று உணருவீர்களா? உங்களுடைய உணர்சிவேகங்கள் எப்படியிருக்கும்? அமைதியான, சாந்த மான மற்றும் அறிவுத் தெளிவுள்ளதாக இருக்குமா? அல்லது மனஅழுத்தம், பதட்டம் நிறைந்ததாக அல்லது ஒரு வேளை கோபத்துடன் இருக்குமா? உங்கள் பிரதியுத்திரமாக செயல்படும் முறையிலும், அதினால் வெளியாகும் விளைவு களிலும் எந்த அளவுக்கு திருப்திகரமாயிருக்கிறீர்கள்.

சோதனைகள் மற்றும் சவால்கள் வரும்போது, அவை களுக்கு எதிர்த்து மனிதன் பல வழிகளில் செயல்படு கிறான். இந்த செயல்களில் உள்ள மிக பெரிய வேறுபாடு களை சில வருடங்களாகவே நான் கவனித்துவருகிறேன். இதன் பலனாகவும், என் தனிப்பட்ட அனுபவங்களின் மூலமாகவும், நான் கற்றுக்கொண்டது என்னவென்றால், எந்த ஒரு சவாலின் விளைவும் நாம் வெளிப்படுத்தும் எதிர் செயலை பொறுத்தே இருக்கும்.

சவால்களின் மத்தியில் குறிப்பாக செயல்படதக்க சாத்தியம் நடைமுறையில் அநேகம் இருந்தாலும், இந்த சூழ்நிலையில் வெளிப்படும் எந்த ஒரு செயலும் விசுவாசம் -

சார்ந்த அல்லது பயம் - சார்ந்த, என்ற இவ்விரண்டு வகைகளில் ஏதாவது ஒரு பக்கத்தில் சாயும் வாய்ப்பு உண்டு.

இங்குள்ள வித்தியாசங்களை ஏற்று கவனித்து பாருங்கள். விசுவாசம் உயிர்ப்பிக்கிறது. அதோடு முடி விலே விடுவிக்கிறதாயும் இருக்கிறது. ஆனால் பயமோ அடக்கியாளுகிற சக்தியுடையதாயும் முடிவிலே அழிக்கிற தாயும் இருக்கிறது.

ஒருவர் விசுவாசத்தின் மூலமாக முற்போக்கான விளைவுகள் வரும் என்று எண்ணும்போது அது நம்பிக் கையை பிறப்பிக்கிறது. நம்பிக்கையானது நம்மை ஊக்கு விக்கிறது. அதோடு விசுவாசத்தின் மூலமாக என்ன பெற்று கொள்வோம் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறதோ அந்த இலக்கை அடைய நம்பிக்யையானது நம்மை துரிதப் படுத்துகிறது. விசுவாசம் சார்ந்த செயலின் விளைவுகள் உண்மையாக நன்மையானதாகவே இருக்கிறது. சில சமயங் களில் அவை அற்புதவிதமாகவும் இருக்கிறது. மறுபுறம் பயம் சார்ந்த செயல் ஒரு வேளை ஆரம்பத்தில் ஒருவரை செயல் படவைக்க உந்தினாலும் பலவேளைகளில் அந்த நபரை முடக்கி எந்த ஒரு செயலையும் செய்ய விடாதபடி தடுத்துவிடும் அதோடு சுயபரிதாபம், மனசோர்வு என்பவைகளில் அந்த நபரை விட்டுவிடுகிறது.

இந்த இரண்டு அணுகுமுறைகளிலும் உள்ள வித்த யாசங்கள் தான் எத்தனை! விஷேசமாக, விசுவாசமுள்ள செயலானது அதிக வெற்றிகரமான பலனை கொண்டு வரும் என்கிற உறுதியான ஆதாரம் இருக்கும் பட்சத்தில், ஏன் எல்லாரும் தங்கள் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் போது, பயம் சார்ந்து செயல்படுவதை விட்டுவிட்டு விசுவாசம் சார்ந்து செயல்படக்கூடாது? அநேகமாக, சிலர் தாங்கள் விசுவாசிப்பது என்ன என்றே உறுதியில்லாமல் இருக்கிறார் கள். வேறுசிலர் தாங்கள் எவற்றில் விசுவாசம் வைக்க வேண்டும் என்றே அறியாமல் இருக்கலாம். மற்றும் சிலர் விசுவாசம் என்றால் என்ன என்பதைப் பற்றிய நிச்சயமில்-லாமல் இருக்கலாம். உண்மையில் விசுவாசம் என்கிற இந்த முழு காரியம் அடிக்கடி குழப்பத்தை ஏற்படுத்துவதால் இவற் றில் நம்மனதை செலுத்துவது ஒரு கடினமான செயலாய் இருக்கின்றது.

பழைய ஏற்பாட்டில் உள்ள யோபுவின் வாழ்க்கையி லிருந்து விசுவாசத்தைப் பற்றி அதிகமாக கற்றுக் கொள்ள முடியும். யோபு தன் வழிகளில் எல்லாம் உத்தமனும், சன் மார்க்கனுமாய் இருந்தான். உண்மையில் அந்த நாட் களில் எல்லா ஊர்களிலும் சிறந்த நீதிமான் என்று பெயர் பெற்றவன். சிறந்த குணம் படைத்த மனிதன் என்பதோடு மட்டும் அல்லாமல் செல்வசெழிப்புமிக்க மனிதனாயும் காணப்பட்

டான். அவன் மிகுந்த ஆஸ்தி உடையவனாகவும் அநேக வேலைக்காரர்களை உடையவனாகவும் இருந்தான்.

இந்த மகத்தான வெற்றிவாழ்க்கையின் மத்தியில், ஒரு நாள், பெருந்துன்பம் அவனை கொடுமையாக தாக்கினது. ஒரு சில மணி நேரத்திற்குள்ளாக பேரழிவுக்கு மேல் பேரழிவு வந்து அவனுக்கு சொந்தமானவை அனைத்தும் அவனிடம் இருந்து பறித்துகொள்ளப்பட்டது. இது முடிந்த கொஞ்ச நேரத்தில், கொப்பளம் போன்ற பருக்கள் பொங்கி அவன் உடம்பெல்லாம் பரவியது. அதன்பின் இந்த பேரழிவு அவன் மேல் வருவதற்கு அவன் செய்த சில காரியங்கள் தான் காரண மாக இருக்கும் என்று அவன் மனைவியும், நண்பர் களும் அவன்மேல் பொய்யாய் பழிசுமத்தினார்கள்! யோபு பொருளா தார ரீதியாகவும், மனரீதியாகவும் சரீர பிரகாரமாகவும், உணர்வு ரீதியாகவும் சின்னாப்பின்னமாக்கப்பட்ட நிலையில் இருந்தாலும் இந்த பயங்கரமான சூழ்நிலையின் மத்தியிலும் பயத்தின் மூலம் செயல்படாமல் விசுவாசத்தின் மூலம் செயல்பட்டான்.

யோபு இந்த சவால்களுக்கு நேராய் விசுவாசம் சார்ந்த செயலை வெளிப்படுதினான், இந்த செயலை ஒவ்வொரு நாளும் விடாப்பிடியாக பிடித்துக் கொண்டான், இதன் பல னாக தன் சரீர சுகத்தையும், தனக்கு முன்னிருந்த ஆஸ்தி களை போல இரட்டிப்பான பங்கையும், திரும்ப வெகுமதியாக

பெற்றுக் கொண்டான். யோபுவுக்கு இருந்த விசுவாசம் எப்படிப்பட்டது? அதை எங்கிருந்து அவன் பெற்று கொண்டான்?

**உலக சரித்திரத்திலேயே அதிகமாக அச்சிடப்படும் ஒரே புத்தகமான பரிசுத்த வேதாகமத்தில் (பைபிள்) பதிவுசெய்யப்பட்டுள்ள தேவனுடைய வாக்குத்தத் தங்கள் மேல் மட்டுமே யோபு தன் விசுவாசத்தை வைக்க தீர்மானித்தான்**

தன்னுடைய சூழ்நிலைகள் எவ்வளவு பேரழிவையுடை யவைகளாய் இருந்தாலும் சரி, கண்களால் கண்டதை யும், உணர்வு ரீதியாக உணர்ந்ததையும் விட்டு, வாக்குத் தத்தங்களை விசுவாசிக்க மனதார முடிவுசெய்தான். அவன் வேறு எதிலும் நம்பிக்கை வைக்கவில்லை.

விசுவாசத்தின் மூலம் சவால் நிறைந்த சூழ்நிலைகளை மேற்கொள்ள முடியும் என்பதை யோபின் கதை மட்டுமே விளக்குகிறது என்பதல்ல. இன்றும் துக்கம் நிறைந்த சூழ் நிலைகளில் இருந்து, விசுவாசம் மக்களை எப்படி விடுவிக் கிறது என்ற எத்தனையோ அற்புத சம்பவங்கள் நடைபெற்றது உண்டு. மரணத்திற்கு ஏதுவான நோய் குறித்து முன்னறி விக்கப்பட்ட நிலையில் விடுதலைதரும் வாக்குத்தத்தங்கள் மேல் என் விசுவாசத்தை வைக்க நான் தீர்மானித்த போது, விசுவாசத்தின் வல்லமையை அனுபவித்தேன்.

2001-ம் ஆண்டில் ஊனையும் அதோடு சம்பந்தப் பட்ட மூல உயிரணுக்களையும் தாக்கக்கூடிய, தன்னுடல் தாங்குதிறன்கொண்ட கடுமையான இரத்தசோகை (அப் லாஸ்டிக் அனிமியா) நோயினால் நான் பாதிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. மூன்று குறுகிய வாரத்திற்குள்ளாக இந்த கொடிய நோயானது. என் ஊன்களையெல்லாம் அழித்து, நோய் எதிர்ப்பு சக்தியை குறைத்து என் வாழ்க்கை பயணத்தையே குறைத்துப்போட்டது.

இரத்தபரிசோதனையில் பலமுறை வெள்ளணுக் கரு எண்ணிக்கை 0.0 வாக இருந்தது. இதன் பொருள் என்ன வென்றால், எந்த ஒரு கிருமியையும் அல்லது தொற்று நோயையும் எதிர்த்து போராடும் வாய்ப்பே என் உடலுக்கு இல்லை என்பதே.

இதன் விளைவாக கிருமிகளின் தாக்குதல் குறைக்கும் ஒரு விசேஷ அறையில் தனித்து வைக்கப்பட்டேன். பூக்கள் பழங்கள் அனுமதி இல்லை உள்ளே நுழைவதற்கு முன் தயவுசெய்து நர்ஸ்சை சந்திக்கவும் என்றும் என் அறைக்கு வெளியில் ஒரு முன் எச்சரிக்கை அடையாளமும் போடப்பட்டிருந்தது.

இந்த நோயின் மூலமாக இரத்த அணுக்கள் உற்பத்தி யாவது நிறுத்தப்பட்டது, இதன் காரணமாக ஒவ்வொரு மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு ஒரு முறை இரத்தம் மாற்றப்பட

வேண்டிய தேவை ஏற்ப்பட்டது. என் உடன் பிறப்புகளிலும் மற்றும் உலகமெங்கும் ஊன் தானம் செய்ய தகுதியுள்ள யாராவது ஒருவர் இருக்கின்றனரா என்று தேடுதல் நடத்தப் பட்டது. ஒருவர் கூட கண்டுப்பிடிக்கப்படவில்லை. இந்த நிலையில் "நீ ஒரு அசம்பாவிதத்தினால் திடீரென தாக்கப்பட்ட துரதிஷ்ட வசமான மனிதன்" "நாங்கள் உனக்கு எதாகிலும் செய்ய விரும்பினோம், ஆனால் முடியவில்லை, எங்களை மன்னிக்கவும்'' என்றெல்லாம் மருத்துவர்கள் கூறி னார்கள். இத்துறையை சார்ந்த வல்லுநர்கள் கூட, ஏன் இந்த நோய் என்னை தாக்கியது என்று கூட கண்டுபிடிக்க முடியவு மில்லை, அதோடு எனக்கு ஒரு நம்பிக்கையையும் அவர் களால் கொடுக்க முடியவில்லை.

ஏறக்குறைய ஒரு மாதம் மருத்துவமனையில் இருந்த பின், முடிவில்லாத இந்த சூழ்நிலையில் தொடர்ந்து இருக்க முடியாது என்று மருத்துவர்கள் தெரிவித்துவிட்டனர். அதன் பின், "உன் குழந்தைகளை விட்டு விலகியிரு, உன் மனை விக்கு முத்தம் கொடாதே, செல்லபிராணிகளை அப்புறப் படுத்து, பொது இடங்களுக்கு செல்லாதே." என்று சில அறி வுரைகள் சொல்லப்பட்டு நான் வீட்டிற்கு அனுப்பப்பட்டேன்.

இந்த நோய் மரணத்தை பல வழிகளில் கொண்டு வரும் என்றும், இவற்றுள் ஒன்றில் நான் சிக்கி மரிப்பது சில கால அளவை பொறுத்தே இருக்கிறது என்றும் மருத்து

வர்கள் எச்சரித்தார்கள். இந்த சூழ்நிலையில் நான் எப்படி செயல்படபோகிறேன் என்ற தீர்மானம் எடுப்பது என்னை பொறுத்தே இருந்தது.

சூழ்நிலைகள் நிமித்தம் வந்த பயம் என்னை மேற்க் கொள்ள அனுமதிக்காமல், தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மேல் என் விசுவாசத்தை வைக்க, நிதானத்துடன் யோசனை செய்து தீர்மானித்தேன்.

என்னுடைய இந்த தீர்மானமானது, நான் நாள் தோறும் பயத்துடன் போராடும் விசுவாச பயிற்சியாக மாறி யது. அதோடு என் மன உறுதியை வெளிப்படுத்தும் பயிற்சி யாகவும் மாறியது. என் வாழ்க்கையிலும் வியாபாரத்திலும் கடைபிடித்து, தொடர்ந்து பின்பற்றிய ஒரே விதமான அணுகுமுறை இது, நீங்களும் சிறப்பான பலன் பெற இதை செய்யவேண்டும். சுகம்பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எனக்கு இருந்தது, அதை சுருக்கமாக விவரிக்கும் ஒரு திட்டத்தை நான் எழுதினேன். சரீர சுகம் சம்பந்தப்பட்ட வாக்குத்தத்தங்களை தெரிந்தெடுத்து, அவைகள் எனக் காகவே எழுதப்பட்டவை என்று நம்பினேன். நான் மேம் படுத்திய சில முற்போக்கான உறுதிமொழிகளோடு கூட இந்த வாக்குத்தத்தங்களையும் ஒவ்வொரு நாளும் வாயினால் அறிக்கை செய்தேன். இதை நான் செய்ய செய்ய பயமானது என்னைவிட்டு பறந்துபோனது, விசுவாசம் உயர்ந்தது. ¤

மற்றும் நான் குணமாக்கப்பட முடியும் என்ற நிலையில் இருந்து, நிச்சயமாகவே குணமடைவேன் என்ற நிலைக்கு, நம்பிக்கை என்னை ஊக்குவித்தது.

இந்த விசுவாசம் சார்ந்த நிதானத்துடன் யோசித்து செய்த செயல், பலனை உண்டு பண்ணியது, அதுவும் வியக்கத் தக்க பலனை உண்டு பண்ணியது. இந்த நோய் தாக்கிய நான்கு மாதங்களுக்கு பின்பு 41 முறை இரத்த மாற்றம் செய்த பிறகு, நான் எதிர்பார்த்த அற்புதம் வந்து சேர்ந்தது. எந்த விதமான மருத்துவ குறுக்கீடோ அல்லது விளக்கமோ இல்லாமல், எலும்பில் உள்ள ஊன், ஒன்றும் இல்லாத நிலை யில் இருந்து வளர ஆரம்பித்தது, மருத்துவர்களே ஆச்சரியப் படதக்க விதத்தில் வலிமையும் ஆரோக்கியமும் உள்ள இரத்த அணுக்கள் உருவாக தொடங்கியது.

ஜெபத்தினாலும் மற்றும் வாக்குத்தத்தங்களில் உள்ள விசுவாசத்தினாலும் எனக்கு இருந்த நோயிலிருந்து, முற்றிலுமாக குணமடைந்து, உடல் நலம் திரும்பப் பெற்றேன். வாக்குத்தத்தங்களில் விசுவாசம் வைக்கிறவர்களுக்கு, கூடாத காரியம் என்று, ஒன்றும் இல்லை என்பதை என் உதாரணம் நிருபிக்கிறது.

“விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.” என்று விசுவாசத்தை பற்றி பரிசுத்த வேதபுத்தகம் (பைபிள்),

தெளிவாக விவரிக்கின்றது. எந்த ஒரு ஆதாரமோ அல்லது நிச்சயமோ தோன்றுவதற்கு முன்னதாகவே, தான் நாடுவது தன்னிடத்தில் உள்ளது என ஒருவர் நம்ப வேண்டும் என்பதே, இதன் பொருள், இந்த விசுவாசமே நம் திடநம்பிக்கையாக இருக்கவேண்டும். இதுவே, வாக்குத்தத்தங்களினுடைய தெய்வீக வல்லமையை திறக்கும் திறவுகோல்!

அதன்பின், இந்த திடநம்பிக்கையின் மூலம் நம் வாழ்க்கையும் நம் வார்த்தையும் வாக்குத்தத்தங்களோடு ஒத்துப்போகும் வகையில் இருக்கவேண்டும். ஏனென்றால் கிரியை (செயல்) இல்லாத விசுவாசம் செத்தது (ஒன்றுக்கும் உதவாதது) என்று எழுதப்பட்டுள்ளது.

2001-ம் ஆண்டில், நான் சிறிய பேப்பர்களில் எழுதி, என் வீட்டிற்குள்ளாக பல இடங்களில் ஒட்டிவைத்த உறுதி மொழிகளிலும், வாக்குத்தத்த வசனங்களிலும் இருந்து சில கீழே உள்ளன.

இவைகள் எல்லாம் என் வாழ்க்கையில் உண்மையாக மாறும் என்ற தைரியத்துடனும், திடநம்பிக்கையுடனும், எதிர்பார்புடனும் ஒவ்வொரு நாளும் பல முறை என் நாவினால் அறிக்கையிடுவேன் என்று முடிவெடுத்தேன்.

- **என்னுடைய சரீரம் பரிசுத்த ஆவியினுடைய ஆலயம், அங்கே இருளும், நோயும் குடி கொள்ள முடியாது!**

நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார், அவை சமாதானத்திற்கேதுவானவைகளாம்!

- எனக்கு விரேதமாக உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும்!

- இயேசு, ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தார். பரிபூரணப்பட்ட வாழ்க்கைக்காக நன்றி ஆண்டவரே!

- என் உடலில் உள்ள எதிர்ப்பு சக்தி மிக சீராக இயங்குகிறது!

- என்னுடைய எலும்புகளுக்கு உள்ளே புதுமையான, சுத்தமான, வலிமையான ஊனை உருவாக்குகிறபடியால் உமக்கு நன்றி தகப்பனே!

- முழுமையான, நிறைவான சுகத்திற்காக நன்றி கர்த்தாவே. உம்முடைய வாக்குத் தத்தத்தின்படி நான் குணமானேன்.

- அப்போது குஷ்டரோகி ஒருவன் வந்து, “ஆண்டவரே, உமக்கு சித்தமானால், என்னை

சுத்தமாக்க உம்மால் ஆகும்'' என்றான். இயேசு "எனக்கு சித்தமுண்டு சுத்தமாகு" என்றார்.

- ¤ பரிசுத்த வேதாகமம் (பைபிள்) ஒரு வித்தயாசமான புத்தகம்.
- ¤ 'உயிருள்ளது, செயல்படக்கூடியது' என்று உரிமை பாராட்டக்கூடிய வேறு எந்த ஒரு புத்தகமும் இல்லை.

இதில் உள்ள 8000க்கும் அதிகமான வாக்குத்தத்தங் களும் 'ஒரு போதும் வெறுமையாய் திரும்புவதில்லை' ஆனால் அதில் உள்ள வல்லமை அற்புதமானவைகளை செய்து முடிக்கும் என்று உரிமை பாராட்டக்கூடிய வேறு எந்த ஒரு புத்தகமும் இந்த உலகில் இல்லை.

'சத்தியத்தின் அறிவை வெளிப்படுத்துகிறது' என்று உரிமை பாராட்டக்கூடிய வேறு எந்த ஒரு புத்தகமும் இல்லை.

எல்லாரும் பயன்படுத்தக் கூடியது, அது மட்டுமல்லாமல் வாழ்க்கையின் தேவையான எல்லாப்பக்கங்களுக்கும் பொருந்தக்கூடியது, தனிப்பட்ட வாழ்க்கைக்கான வாக்குத் தத்தங்களை கொடுக்கக்கூடியது என்று சொல்லகூடிய வேறு எந்த ஒரு புத்தகமும் இல்லை.

‘இவற்றின் பக்கங்களில் உள்ள பொக்கிஷங்கள் அனைத்தும் நித்தியமானவைகள்’ என்று உரிமை பாராட்டக்கூடிய வேறு எந்த ஒரு புத்தகமும் இல்லை: ‘ வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் என் வார்த்தைகள் ஒரு நாளும் ஒழிந்து போவதில்லை’

‘இறைவனோடு சமமானது’ என்று உரிமை பாராட்டக் கூடிய வேறு எந்த ஒரு புத்தகமும் இல்லை:

**“ ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனா யிருந்தது... அந்த வார்த்தை மாம்சமாகி... நமக் குள்ளே வாசம்பண்ணினார்...”**

ஒருவர், இந்த வாக்குத்தத்தங்களை புரிந்து கொண்டு, வாழ்க்கையின் சவால்களை மேற்கொள்ள தேவையான விசுவாசத்தை பெற்றுகொள்வது எப்படி? முதலில் விசுவாசம் வருகிறது, அதன்பின் வாக்குத்தத்தங்களை குறித்து வாசிக்கும்போது, வாக்குத்தத்தங்களை குறித்து அறிந்து கொள்ளும்போது, விசுவாசம் வளருகிறது! ( இதுவும் ஒரு வாக்குத்தத்தம்) வாக்குத்தத்தங்கள் அனைத்தும் இலவசம், அவை எல்லாருக்கும் கிடைக்ககூடியதாக இருந்தாலும் இந்த புத்தகத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தங்கள் நம் வாழ்வில் வெளியரங்கமாக நடக்க வேண்டுமானால், நாம்

கட்டாயம் விசுவாசிக்கவேண்டும் என்று, நாம் ஒவ்வொரு வரும் ஞாபகப்படுத்தப்படுகிறோம் அதோடு உதாரணங்களை பின்பற்றும்படி நாம் உற்சாகப்படுத்தப்படுகிறோம்.

**"...வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்திரித்துக் கொள்ளுகிறவர்களை பின்பற்றுகிறவர்களாயிருங்கள்"** (எபிரேயர் 6:12)

வாக்குத்தத்தங்கள் உங்களுக்கும் உரியவைகளாய் இருக்கிறது. தேடுகிற யாவருக்கும், கேட்கிற யாவருக்கும், தட்டுகிற யாவருக்கும் அது உரியதாயிருக்கிறது. வாக்குத்தத்தங்கள் மூலம் உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது. நீங்கள் ஏற முடியாத அளவுக்கு மிக உயரமான மலைகள் இல்லை, நீங்கள் கடக்க முடியாத அளவுக்கு மிக தாழ்வான பள்ளதாக்குகள் இல்லை, நீங்கள் பிரயாணிக்க முடியாத அளவுக்கு மிக ஆழமான சமுத்திரங்கள் இல்லை.

நான் மரண இருளின் பள்ளதாக்கில் நடக்கும் அனுபவத்தை பெற்றது மட்டுமல்லாமல், வாக்குத்தத்தங்களில் விசுவாசம் வைத்ததின் பலனாக, அற்புத வல்லமையை என் சரீரத்தில் அனுபவித்தேன். வாக்குத்தத்தங்கள், உங்கள் வாழ்க்கையில் அற்புதங்களை உண்டுபண்ண முடியும், உண்டு பண்ணும். எதிர்காலத்திலோ அல்லது இப்போதோ

நீங்கள் எதிர்நோக்கும் எந்த சவாலுக்கும் மேலே உயர உதவும், அதோடு பயத்தை மேற்கொள்ள பயன்படும் நிகரில்லா ஆயுதமாகவும் உதவும்.

## இரட்சிப்பின் ஜெபம்:

இப்போதுள்ள வாழ்க்கையிலும் சரி, இனிவரும் வாழ்விலும் சரி, தேவன் கொடுக்கும் எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுகொள்ள தேவனுடைய குமாரன், இயேசு கிறிஸ்துவோடு வைக்கும் தனிப்பட்ட உறவு இன்றியமையாதது.

**"நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்"** என்று இயேசு சொன்னார் (யோவான் 10:10)

**"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே... மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே"**

என்று 1 தீமோத்தேயு 2:5ல், வாசிக்கிறோம். தேவனையும் நம்மையும் இணைக்கும் பாலமாக இருப்பவர் இயேசு, நாம் தேவனை சந்திக்கும் ஒரே வழி நம் இருதயத்தில் தனிப்பட்ட முறையில் இயேசுவை ஏற்றுகொள்வது மூலமாகத்தான்.

**"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப் படவுமில்லை"** (அப்போஸ்தலர் 4:12) இயேசுவே அந்த நாமம்.

இதுவரையில் இயேசுவை உங்கள் உள்ளத்தில் அழைக்கவில்லை என்றால் அல்லது அவரோடு உள்ள உறவில் ஏதேனும் சந்தேகம் இருந்தால், இந்த ஜெபத்தை செய்யும்படி உங்களை அழைக்கிறேன். இன்றிலிருந்து அது உங்கள் வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றும் அதோடு உங்கள் வாழ்க்கை முழுவதுமே மாறிவிடும்.



# பரலோக பிதாவே

உம்முடைய உதவி வேண்டி எல்லா உண்மையோடும் உம்மிடத்தில் வருகிறேன். என் வாழ்க்கையை நான் குழப்பிவிட்டேன் என்று எனக்கு தெரியும்.

பெருமைப்பட்டுக்கொள்ளகூடாத அளவுக்கு அநேக காரியங்கள் செய்திருக்கிறேன். உமக்கும் மற்றவர்களுக்கும் விரோதமாக நான் பாவம் செய்தேன். நான் எனக்காகவே தன்நலமுயைடவனாய் வாழ்ந்தேன். இவை எல்லாவற்றில் இருந்தும் என்னை தயவாய் மன்னியும், நான் மனமாற விரும்புகிறேன், அப்படி நான் செய்ய உம்முடைய உதவி எனக்கு தேவை.

என்னுடைய பாவங்களுக்காய் இயேசு சிலுவையிலே மரித்தார் என்று நான் நம்புகிறேன். அவர் மரணத்தில் இருந்து உயிரோடு எழுந்தார் என்றும் அவர் நித்தியமாய் வாழ்கிறார் என்றும் விசுவாசிக்கிறேன்.

ஆண்டவர் இயேசுவே நீர் எனக்கு தேவை.
என் பாவங்களில் இருந்து நான் மனந்திரும்ப
விரும்புகிறேன். உம்முடைய உதவியை வேண்டுகிறேன்.
என் இதயத்தில் வாரும், உமக்காய் வாழ பெலன் தாரும்.

என்னை மன்னித்து, இரட்சித்து,
நித்திய வாழ்வு கொடுத்ததற்காய் நன்றி.

நீர் விரும்புகிற மனிதனை போல நான் மாற
எனக்கு உதவிசெய்யும். உமக்கு நன்றி.
கிறிஸ்து இயேசுவின் நாமத்தில், ஆமென்.

*Grace Assembly of God Church*
*406, Aziz Center, 5th Floor, Thousand Lights,*
*Chennai - 600 006.*
*Phone : 044 - 2829 2667; 2829 3792*



ஜெப் சிசிலோ, மினிசோடாவில் உள்ள, ஆப்பிள் வேலி, என்ற இடத்தில் ஒரு முன்னேறிவரும் ரியல் எஸ்டேட் ஏஜன்டாக வசித்து வருகிறார். இவரது 20 ஆண்டிற்க்கும் மேற்பட்ட அனுபவத்தின் மூலம் *RE / MAX* என்று சொல்லப்படும் வகையில் ரியல் எஸ்டேட் அதிபராக, பல்வேறு சர்வதேச விருதுகள் பெற்றிருக்கிறார். *Hall of Fame*ல் இடம் பெற்றவராகவும், *Lifetime Achievement* விருது மற்றும் *The coveted Circle of Legends* விருதும் பெற்றிருக்கிறார். தேசிய அளவிலான வியாபாரி களின் போட்டிகளில் வெற்றி பெற்றவர். வியாபார திட்டங்களை ஊக்கப்படுத்தும் விவரமான யுக்திகளை உருவாக்கியவர், உலகம் முழுவதிலும் வெவ்வேறு வியாபாரம் மற்றும் உற்சாகமூட்டும் தலைப்புகளில் பேசியிருக்கிறார்.

2001ம் ஆண்டில், ஜெப் ஒரு தீராத நோயால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மரித்துவிடுவார் என்று மருத்துவ நிபுணர்களால் கூறப்பட்டது. ''மரணத்தை எதிர்நோக்குவது என் வாழ்வின் மிகபெரிய சவாலாக காணப்பட்டது. ஆனால், நான் சந்திக்க போகும் பிரச்சனையை காட்டிலும் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மிகப்பெரியவை'', என்று ஜெப் ஒப்புக்கொண்டார். இந்த நேரத்தில், தேவன் தன்னை அற்புதமாய் சுகப்படுத்துவார் என்று விசுவாசித்ததை, ஜெப் அன்றாட நடப்பு குறிப்பாக எழுத ஆரம்பித்தார். இந்த நடப்பு குறிப்பே ஒரு வல்லமையுள்ள புத்தகமாக மாறியது.

''ஒரு அற்புதத்தை நோக்கி பயணம்'' என்று சவாலின் மத்தியில் பின்வாங்காத ஜெப்பின் நம்பிக்கையை குறித்த கதை. இது துன்பத்தை மேற்கொள்வதற்கான ஒரு கையேடாகவும், மேகங்கள் போன்று மகிழ்ச்சியற்ற சூழ்நிலை நம்மை நெருக்கும்போது, தேவனுடைய வாக்குத்தத்தங்களில் விசுவாசம் வைக்க உதவும் ஒரு வழிகாட்டியாகவும் இருக்கிறது. ஜெப் அவர்களால் நேசிக்கப்படுகிறவர்களும், இந்த புத்தகத்தை வாசிக்கிறவர்களும் ஆசீர்வதிக்கப்படும் படியாக, இருதயத்தில் இருந்து எழுதப்பட்ட, ஞானமும், உற்சாகமும் நிறைந்த, ஒரு வல்லமையுள்ள சாட்சி இது. ''ஒரு அற்புதத்தை நோக்கி பயணம்'' என்கிற புத்தகம் *Amazon.com* என்ற இணைய தளத்தில் கிடைக்கும் அல்லது *www.JourneytToAMiracle. com* மூலமாகவும் பெறலாம்.